சிவகாமி பிரின்டிங் பிரஸ், ஸ்ரீவைகுண்டம்.

ஸ்ரீ:

கம்ப ராமாயணம்

பால காண்டம்

(முதல் ஏழு படலங்கள் பாட பேதங்களுடன்)

சென்னைப் பல்கலைக் கழகத்துத்
தமிழாராய்ச்சித்துறைத் தலைவர்
S. வையாபுரிப்பிள்ளை யவர்களாலும்,

சென்னை அட்வொகேட்
P. N. அப்புஸ்வாமி அய்யரவர்களாலும்
பரிசோதிக்கப்பட்டது.

ஆழ்வார்திருநகரி
பெரியன்: வெ. நா. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்
பிரசுரித்தது.

காபிரைட்] 1937 [விலை அணா 10

முன்னுரை

சில வருடங்களாக நாங்கள் இராமாயணப் பிரதிகளைப் பரிசோதித்துப் பாடபேதங்களைக் குறித்துக்கொண்டு ஆராய்ச்சி செய்து வந்தோம். இவ்வாராய்ச்சியைக் கண்ட ஆழ்வார் திருநகரி பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸ அய்யங்காரவர்கள் பாடபேதங்கள் குறிப்புரை முதலியவற்றுடன் இராமாயணப் பதிப்பொன்று வெளியிடுதல் நலமெனக் கூறி, அப்பதிப்பினை வெளியிடும் பொறுப்பைத் தாம் வகித்துக் கொள்வதாக ஒப்புக்கொண்டு எங்களுக்கு மிக்க ஊக்கமளித்தார்கள். முதலாவதாகப் பால காண்டத்தைப் பதிப்பிடுதற்குத் தக்கபடி மூல பாடத்தையும் பாட பேதங்களையும் தயார்செய்யலாயினோம். செந்தமிழ்ச் செல்வர் ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்களும் ஏகதேசமாக உதவிபுரிந்து வந்தார்கள்.

ஆனால் பல தொழில்களுக்கிடையே இப்பதிப்பு நடைபெற வேண்டுவதாயிருந்ததால், விரைவாக அச்சிடமுடியவில்லை. சில வசதிக் குறைவால் அச்சுவேலையே நடவாதபடி தடைப்பட்டிருந்தது. அன்றியும், பாட பேதங்களைக் குறித்தும், ஆராய்ச்சி செய்தும், பாடங்களை வரையறை செய்தும் இராமாயணப் பதிப்பொன்று வெளியிட வேண்டும் பொறுப்பு பல்கலைக் கழகத்துத் தமிழாராய்ச்சித் துறையினரே மேற்கொள்ளத்தக்கதென்னுங் கருத்துடையோம். இவ்வகைப் பதிப்பு வெளிவருதற்கான முயற்சியும் நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் இதுவரை அச்சிட்டதனையேனும் புத்தக ரூபமாக வெளியிட வேண்டுமென்று பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸ அய்யங்காரவர்கள் வற்புறுத்தினார்கள். அவர்கள் விருப்பத்திற்கு இணங்க, இப்பகுதி இப்பொழுது வெளியிடப் படுகின்றது.

இப்பதிப்பில் நூதன முறைகள் சில கையாளப்பட்டுள்ளன:

1. பால காண்டத்தில் ஆரம்பத்தில் நூற்குப் புறம்பாகக் காணப்படும் தனியன் முதலிய செய்யுட்கள் ஒருமுறை தழுவாது முன் பின்னாகப் பிரதிகளிற் காணப்பட்டன. அவற்றை ஒருமுறைப் படுத்து இப்பதிப்பில் தந்துள்ளமை காணலாம்.

2. படலச் செய்யுளின் எண் செய்யுளின் தொடக்கத்தில் தமிழிலும், நூற்செய்யுளின் தொடர்ந்த எண் செய்யுளினிறுதியில் ஆங்கிலத்திலும் தரப்பட்டுள்ளன.

3. அடிக்குறிப்பில் இருதலைப் பகரக்குறியுள் [ ] காணப்படும் தமிழ் எண் படலச்செய்யுளின் எண்ணைக் குறிப்பது.

4. இத்தமிழ் எண்ணை யடுத்துள்ள ஒற்றை யுடுக்குறி அச்செய்யுள் ஒன்றிரண்டு பிரதிகளிற் காணப்பெறவில்லை யென்பதனையும், இரட்டை யுடுக்குறிகள் அது பல பிரதிகளிற் காணப்பெறவில்லை யென்பதனையும் குறிப்பன.

5. அடிக் குறிப்பிற் பாடபேதங்களுக்கு முன்னுள்ள எண்கள் செய்யுளின் சீர்களைக் குறிப்பன. சீரொன்றற்கே பல பாடங்களிருப்பின், அவற்றைக் கோலன் (:) அடையாளமிட்டுப் பிரித்துக் காட்டியிருக்கிறது.

6. நூலகத்துக்குச் சேர்க்குந் தகுதியற்ற மிகைச் செய்யுளை எச்செய்யுளின் பின் அது காணப்படுகிறதோ அச்செய்யுட்குரிய ஆங்கிலத் தொடரெண்ணோடு (a) முதலியவற்றைச் சேர்த்து அடிக்குறிப்பிலே கொடுக்கப்பட்டுள்ளது.

7. செய்யுட் கிரமத்திலுள்ள வேறுபாடும், படலக் கிரமத்திலுள்ள வேறுபாடும் பிறவும் உரிய விடங்களில் அடிக்குறிப்பிற் காட்டப்பட்டுள்ளன.

பாடபேதங்களாகத் தரப்பட்டுள்ளனவற்றிற் பல பாடமாகவே கொள்ளத்தக்கனவா யிருக்கும். எழுத்துப் பிழைகளென்று எளிதிலறியக் கூடியனவற்றையும், உண்மையான பாடங்களை அறுதியிடுதற்கு உதவுமாகலின், பாடபேதங்களாகவே காட்டியிருக்கின்றது.

உலக மகா கவிகளுள் ஒருவரெனப் போற்றத்தகும் கம்ப நாடரது செய்யுட்களின் உண்மைப் பாடங்களை வரையறை செய்வதில் எத்துணை இடர்ப்பாடுகள் உள்ளன வென்பதை இப்பதிப்பு விசதமாக்க வல்லது.

பல பிரதிகளை ஒப்பிட்டுப் பெற்ற பாடபேதங்களுடன் பதிப்புக்கள் வெளிவர வேண்டுவது இன்றியமையாதது. இங்ஙனமே ஒவ்வொரு பிரதேசத்திலும் வழங்கி வந்த பிரதியின் படியே வெளியிடும் பதிப்புக்களும் அவசியமாக வேண்டற்பாலனவாம். இவ்விரண்டு வகைப் பதிப்புக்களும், நூற்பாடங்களையும் பாட பேதங்களையும் பல முறை ஆராய்ச்சி செய்து உண்மைப் பாடங்காணுதற்கு இன்றியமையாக் கருவிகளாம். இதனை யுணர்ந்து, ஆழ்வார் திருநகரிப் பிரதேசத்தில் வழங்கி வந்த பிரதியின்படி ஒரு பதிப்பு வெளிவருதற்கு அன்பர் பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸ அய்யங்காரவர்கள் பெரிதும் முயன்று வருகிறார்கள். இப்பதிப்பினைத் தமிழுலகு ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றது.

இப்பதிப்பின் பொருட்டுப் பிரதிகளுதவி யுபகரித்த அன்பர்கள் அனைவர்க்கும் எங்கள் நன்றி யுரித்தாகின்றது. இதனை வெளியிடும் பொறுப்பை மகிழ்ச்சியோடும் உத்ஸாகத்தோடும் ஏற்றுக்கொண்ட தமிழன்பர் பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸ அய்யங்காரவர்களது பேருபகாரத்தினைத் தமிழுலகம் நன்கு பாராட்டுமென்னும் உறுதியுடையோம்.

சென்னை,
22-2-'37.

S. வையாபுரிப் பிள்ளை.
P. N. அப்புஸ்வாமி அய்யர்.

ஸ்ரீ:

கம்ப ராமாயணம்

காப்பு

கடவுள் வணக்கம்

க. ஒன்றா யிரண்டு சுடராயொரு மூன்றா மாகிப்
பொன்றாத வேத மொருநான்கொடைம் பூத மாகி
அன்றாகி யண்டத் தகத்தாகியப் புறத்து மாகி
நின்றா னொருவ னவனீள்கழ னெஞ்சில் வைப்பாம்.

இராமபிரான்

உ. நன்மையுஞ் செல்வமு நாளு நல்குமே
தின்மையும் பாவமுஞ் சிதைந்து தேயுமே
சென்மமு மரணமு மின்றித் தீருமே
இம்மையே ராமவென் றிரண்டெ ழுத்தினால்.

ங. ஓராயிர மகம்புரி பயனை யுய்க்குமே
நராதிபர் செல்வமும் புகழு நல்குமே
விராயெனும் பவங்களை வேர றுக்குமே
இராமவென் றொருமொழி யியம்புங் காலையே.

இலக்குமி

ச. மாதுளங் கனியைச் சோதி வயங்கிரு நிதியை வாசத்
தாதுகு நறுமென் செய்ய தாமரைத் துணைமென் போதை
மோதுபாற் கடலின் முன்னாள் முளைத்துநாற் கரத்தி லேந்தும்
போதுதா யாகத் தோன்றும் பொன்னடி போற்றி செய்வாம்.

இராமசரிதம்

ரு. பராவரு மிராமன் மாதோ டிளவல்பின் படரக் கான்போய்
விராதனைக் கரனை மானைக் கவந்தனை வென்றி கொண்டு
மராமரம் வாலி மார்பு துளைத்தணை வகுத்துப் பின்னும்
இராவணன் குலமும் பொன்ற வெய்துட னயோத்தி வந்தான்.

[க - ச * *] [உ] 7 - 8 தேய்ந்து தீருமே. 8 தீயுமே. 12 (ச்) செய்யுமே. 13 இம்மையில். [ரு *] 14 - 18 ஏழும் வாலி மார்பமுந் துளைத்துப் பின்னர். 15 மார்புந்.

கலைமகள்

௬. பொத்தகம் படிக மாலை குண்டிகை பொருள்சேர் ஞான
வித்தகந் தரித்த செங்கை விமலையை யமலை தன்னை
மொய்த்தகொந் தளக பார முகிண்முலைத் தவள மேனி
மைத்தகு கருங்கட் செவ்வா யணங்கினை வணங்கல் செய்வாம்.

ஆஞ்சனேயர்

௭. அஞ்சிலே யொன்று பெற்றா னஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே யொன்றா றாக வாரியற் காக வேகி
அஞ்சிலே யொன்று பெற்ற வணங்கைக்கண் டயலா ரூரில்
அஞ்சிலேயொன்றைவைத்தானவனெம்மையளித்துக்காப்பான்.

நம்மாழ்வார்

௮. தருகை நீண்ட தயரதன் றான்றரும்
இருகை வேழத் திராகவன் றன்கதை
திருகை வேலைத் தரைமிசைச் செப்பிடக்
குருகை நாதன் குரைகழல் காப்பதே.

விநாயகர்

௯. தழைசெவிச் சிறுகட் டாழ்கைத் தந்தசிந் தூரமுந் தாரை
மழைமதத் தறுகட் சித்ர வாரண முகத்து வாழ்வை
இழையிடைக் கலசக் கொங்கை யிமகிரி மடந்தை யீன்ற
குழவியைத் தொழுவ னன்பாற் குறைவற நிறைக வென்றே.

தனியன்

ஆக்கியோன்

௧௦. நாரணன் விளையாட் டெல்லா நாரத முனிவன் கூற
ஆரணக் கவிதை செயதா னறிந்துவான் மீகி யென்பான்
சீரணி சோழ நாட்டுத் திருவழுந் தூரு வச்சன்
காரணி கொடையான் கம்பன் றமிழினாற் கவிசெய் தானே.

[௬ *] 2 படிகை. 5 பொருளே: புகழ்சேர். 8 தெரித்த. [௭ *] 10-11 வாருயிர் காக்க. 20 யொன்று. 22 னவனம்மை: னவனன்மை. 23-24 யளித்துவப்பான்: யளித்துகப்பான். [௮ * *] [௯ * *] 21 (ன்)பார்மேற். 23 விழைக்க. [௧௦ *] 6 சொல்ல: செப்ப. 8 கவிகள். 10 னறிந்தவான். 14 பொன்னி. 15 நாட்டில். 17-18 தூருள் வாழ்வோன்: தூரா ஞேச்சன்: தூரி லோச்சன். 19-20 காரணக் கொடையான்: தாரணி குடையான். 23-24 கவிதை செய்தான்.

கக. அம்பிலே சிலையை நாட்டி யமரர்க்கன் றமுத மீந்த
தம்பிரா னென்னத் தானுந் தமிழிலே தாலை நாட்டிக்
கம்பநா டுடைய கோமான் கவிச்சக்ர வர்த்தி பார்மேல்
நம்புபா மாலை யாலே நரர்க்குமின் றமுத மீந்தான்.

கம்பர் துதி

க௨. வாழ்வார் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பன் வாழ்த்துப்
தாழ்வா ருயரப் புலவோ ரகவிரு டானகலப் [பெறத்
போழ்வார் கதிரி னுதித்ததெய் வப்புல மைக்கம்பநாட்
டாழ்வார் பதத்தைச்சிந் திப்பவர்க் கியாது மரியதன்றே.

க௩. அம்பரா வணிசடை யரன யன்முதல்
உம்பரான் முனிவரால் யோக ராலுயர்
இம்பராற் பிணிக்கரு மிராம வேழஞ்சேர்
கம்பராம் புலவரைக் கருந்தி ருத்துவாம்.

க௪. சம்ப நாடன் னுமைசெவி சாற்றுபூங்
கொம்ப னுடன் கொழுந னிராமப்பேர்
பம்ப நாடழைக் குங்கதை பாச்செய்த
கம்ப நாடன் கழறலை யிற்கொள்வாம்.

க௫. இம்பரு மும்பர் தாமு மேத்திய விராம காதை
தம்பமா முத்தி சேர்தல் சத்தியஞ் சத்தி யம்மே
அம்பரந் தன்னின் மேவு மாதித்தன் புதல்வன் ஞானங்
கம்பன்செங் கமல பாதங் கருத்துற விருத்து வாமே.

க௬. ஆதவன் புதல்வன் முத்தி யறிவினை யளிக்கு மண்ணல்
போதவ னிராம காதை புகன்றருள் புனிதன் மண்மேற்
கோதவஞ் சிறிது மில்லான் கொண்டன்மா றன்னை யொப்பான்
மாதவன் கம்பன் செம்பொன் மலரடி தொழுது வாழ்வாம்.

நூலியற்றிய காலம்

க௭. ஆவின் கொடைச்சகர ராயிரத்து நூறொழித்துத்
தேவன் றிருவழுந்தூர் நன்னாட்டு—மூவலூர்ச்
சீரார் குணதித்தன் சேயமையப் பாடினன்
காரார்கா குத்தன் கதை.

[கக *] 11 தன்னை: யவனை. 15 வள்ளல். 22-23 நரர்கருநல் லமுத: நரருக்கின் றமுத: நரர்க்குமின் னமுத. [க௨ - க௫ * *] [க௬ - க௭ * *] செந்தமிழ் III. 53.

௧௮. எண்ணிய சகாத்த மெண்ணூற் றேழின்மேற் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய விராம காதை பங்குனி யத்த நாளிற்
கண்ணிய வரங்கர் முன்னே கவியரங் கேற்றி னானே.

நூலியற்றிய முறை

௧௯. கமுழுந்த ராயுள கழல்பணி யாதவர் கதிர்மணி முடிமீதே
அழுந்த வாளிகள் தொடுசிலை ராகவ வபிநவ கவிநாதன்
விழுந்த நாயிற தெழுவதன் முன்மறை வேதிய ருடனாய்ந்
தெழுந்த நாயிறு விழுவதன் முன்கவி பாடின தெழுநூறே.

தொகைக்கவி

௨௦. கரைசெறி காண்ட மேழு கதைகளா யிரத்தெண் ணூறு
உரைசெறி விருத்தம் பன்னீ ராயிரத் தொருபத் தாறு
பரவமர் பத்து நாலு படலநூ றிருபத் தெட்டு
வரமுறு கம்பன் சொன்ன வண்ணமு மெண்பத் தேழே.

கவித்திறம்

௨௧. தராதலத்தி னுள்ள தமிழ்க்குற்ற மெல்லாம்
அராவு மரமாயிற் றன்றே—இராவணன்மேல்
அம்புநாட் டாழ்வா னடிபணியு மாதித்தன்
கம்பநாட் டாழ்வான் கவி.

௨௨. இம்பர் நாட்டிற் செல்வமெலா மெய்தி யரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா வோங்கு நீழ லிருந்தாலுஞ்
செம்பொன் மேரு வனையபுயத் திறல்சே ரிராமன் றிருக்கதையிற்
கம்ப நாடன் கவிதையிற்போற் கற்றோர்க் கிதயங் களியாதே.

[கஅ *] 2 சகார்த்த. 3 முந்நூற். 4 ருறின்மேற். 17-18 யுத்த ரத்திற். [க௯ * *] 2 ராயுன. [௨௦ *] இரண்டும் மூன்றும் அடிகள் தம்முள் மாறியுள்ளன. 1 கரைபொரு: கரையுறு. 3 மேழுங்: மாறுங். 5 - 6 யிரத்தைஞ்ஞூறும்: யிரத்தெண் ணூறோடு. 7 உரைசெயும்: உரைதரு: விரைசெறி. 12 தாறும்: தாறில் 13 - 15 பரவுறு மமரீ ரேழும்: பரவுறு சமரம் பத்து: பரசமர் பத்து நாலு: பரிவுறு பாக மூன்று: பருவரை பத்து நாலு. 14 - 15 பாடை பத்து. 17 - 18 றறுபத் தெட்டு(ம்). 19 வரைசெறி: வரமிகு. 23 - 24 (ந்) தொண் ணூற் ரூறே. [௨க * *] 9 - 10 அம்பினல் வீழ்த்தா. 13 - 14 கம்பநா டாள்வான். [௨௨] 9 - 10 கற்பகத்தி னோங்கு.

நூற்பயன்

௨௩. நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழியு மாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டொழிய வாகை
சூடிய சிலையி ராமன் றோள்வலி கூறு வோர்க்கே.

௨௪. மற்றொரு தவமும் வேண்டா மணிமதி லிலங்கை மூதூர்ச்
செற்றவன் விசையப் பாடல் தெளிந்ததி லொன்று தன்னைக்
கற்றவர் கேட்போர் நெஞ்சங் கருதுவோ ரிவர்கள் பார்மேல்
உற்றர சாள்வர் பின்னு மும்பராய் வீட்டிற் சேர்வார்.

௨௫. இறவ ரம்பி லிராமவென் பாரும்பர்
நிறவ ரென்பது நிச்சய மாதலால்
மறவின் மாக்கதை கேட்பவர் வைகுந்தம்
பெறவ ரென்பது பேசவும் வேண்டுமோ.

௨௬. அன்ன தான மகிலநற் றானமுங்
கன்னி தானங் கபிலையின் றானமுஞ்
சொன்ன தான பலமெனச் சொல்லுவார்
மன்னி ராம கதைமற வார்க்கரோ.

௨௭. இராகவன் கதையி லொருவிருத் தத்தி
லேகபா தத்தினை யுணர்வோர்
பராவரு மலரோ னுலகினி லவனாற்
பன்முறை வழுத்தவீற் றிருந்து
புராதன மறையு மண்டர்பொற் பதமும்
பொன்றுநா ளதனினும் பொன்றா
தராவணை யமல னுலகெனும் பரம
பதத்தினை யடைகுவ ரன்றே.

[௨௩ *] 7 வீடியர். 8 - 9 வழிய தாக்கும். 17 டழிய. [௨௪ *] 3 வேண்டேன். 9 பாவில். 10 தெரிந்ததி. 14 கேட்டோர். 15 நெஞ்சிற். உள்ளங். 17 - 18 (ர்)யாவ ரேனும். 18 அன்பால். 19 - 20 உற்றல காண்டு: 21 - 22 பின்ன ரும்பர்வாழ். 22 - 23 மும்பர்வா ழுலகஞ்: மும்பரா யுலகிற். 24 செல்வார். [௨௫ *] 3 னிராமனென். 4 னோரும்பர்: னோதி னால்: னூலும்பர். 12 வைகுண்டம். 15 பேசுதல். 16 வேண்டுமே. [௨௬ **] 4 றானங்கள். 8 றானமே. 10 தானப். [௨௭ **] 3 - 4 லொருகவி தன்னி. 7 (க)கேட்போர்: யுரைப்போர். 11 லவனும். 19 - 20 பொன்றினு மவற்றொடும். 22 வராவணை. 24 - 25 னுலகினு லாய: னுலகினி னாலாம். 27 யணுகுவ.

உஅ. வடகலை தென்கலை வடுகு கன்னடம்
இடமுள பாடையா தொன்றி னாயினும்
திடமுள ரகுகுலத் திராமன் றன்கதை
அடைவுடன் கேட்பவ ரமர ராவரே.

உகூ. வென்றிசே ரிலங்கை யானை வென்றமால் வீர மோத
நின்றரா மாய ணத்தி னிகழ்ந்திடு கதைக டம்மில்
ஒன்றினைப் படித்தோர் தாமு முரைத்திடக் கேட்டோர் தாமும்
நன்றிது வென்றோர் தாமு நரகமெ தெய்தி டாரே.

௩௦. ஆதியரி யோகமந ராயணர் திருக்கதை
யறிந்தனுதி னம்ப ரவுவோர்
நீதியனு போகநெறி நின்றுநெடு நாளதி
னிரந்துசெக தண்ட முழுதுக்
காதிபர்க ளாயரசு செய்துளநி னைத்ததது
கிடைத்தருள்பொ றுத்து முடிவிற்
சோதிவடி வாயழிவில் முத்திபெறு வாரென
வுரைத்தகரு தித்தொ கைகளே.

௩௧. இனையநற் காதை முற்று
மெழுதினோர் வியந்தோர் கற்றோர்
அனையது தன்னைச் சொல்வோர்க்
கரும்பொருள் கொடுத்துக் கேட்போர்
கனைகடற் புடவி மீதே
காவலர்க் கரசாய் வாழ்ந்து
வினையம தறுத்து மேலாம்
விண்ணவன் பதத்திற் சேர்வார்.

௩௨. இத்த லத்தி னிராமாவ தாரமே
பத்தி செய்து பரிவுடன் கேட்பவர்
புத்தி மிக்கரும் புண்ணிய மூர்த்தரும்
எத்த லத்து மவனடி யெய்துவார்.

[உஅ * *] 6 - 8 பாடைகள் யாதொன் றாயினும். [உகூ * *] 6 - 12 மோது மின்றிரா மாய ணத்தை யியல்புட னுலகி னிற்போர். 13 ஒன்றதைப். [௩௦ - * *] [௩௧ * *] உத்தரகாண்டத்து இறுதியிலுங் காணப்படுகிறது. [௩௨ * *] 16 யெய்துமால்.

ஸ்ரீ:

கம்ப ராமாயணம்

பால காண்டம்

பாயிரம்

கடவுள் வாழ்த்து

க. உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே. 1

உ. சிற்கு ணத்தர் தெரிவரு நன்னிலை
எற்கு ணர்த்தரி தெண்ணிய மூன்றினுள்
முற்கு ணத்தவ ரேமுத லோரவர்
நற்கு ணக்கட லாடுத லன்றரோ. 2

ங. ஆதி யந்த மரியென யாவையும்
ஓதி னாரல தில்லென வுள்ளன
வேத மென்பன மெய்ந்நெறி நோன்மையன்
பாத மல்லது பற்றலர் பற்றிலார். 3

அவையடக்கம்

ச. ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவு நக்குபு புக்கென
ஆசை பற்றி யறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ. 4

[க] 8 நீங்கிலா: நீககிலா: நீங்கிடா. 9 ரலகி. 12 யாரெவர். 14 ரான வர்க். 16. ணங்களே. [உ] 2 ணத்தன்: ணத்திற். 3 றெரிதரு: றிரிதரு: றெரிவரு. 4 மந்நிலை. 11 - 12 னேமுத லோனவன். 15 லாடுது(ந): லாடு கை(ந). [ங] 3 மரியன: மறிவன: மரீயென. 7 கில்லன. 8 வுள்ளென. 10 நான்கினும். 12 நன்மையன். 15 பற்றிலர். 16 பற்றரோ. [ச] 12-13 றேன்மற்றவ் வேசில். 12 றேன்றகு

ரு. மூத்த மிழ்த்துறை யின்முறை போகிய
உத்த மக்கவி ஞர்க்கொன் றுணர்த்துவன்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் படுபவோ. 5

சு. துறைய டுத்த விருத்தத் தொகைக்கவிக்
குறைய டுத்த செவிகளுக் கோதில்யாழ்
நறைய டுத்த வசுணநன் மாச்செவிப்
பறைய டுத்தது போலுமென் பாவரோ. 6

எ. வைய மென்னை யிகழவு மாசெனக்
கெய்த வும்மி தியம்புவ தியாதெனிற்
பொய்யில் கேள்விப் புலமையி னோர்புகல்
தெய்வ மாக்கதை யாட்சி தெரிக்கவே. 7

அ. நொய்தி னொய்யசொன் னூற்கலுற் றேனெனை
வைத வைவின் மாமர மேழ்துளை
எய்த வெய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொன்னின்ற தேயத்தே. 8

கூ. அறையு மாடரங் கும்படப் பிள்ளைகள்
தறையிற் கீறிடத் தச்சருங் காய்வரோ
இறையுங் கேள்வி யிலாதவென் புன்கவி
முறையி னூலறி வாரு முனிவரோ. 9

[ரு - கo] வைப்புமுறை 8, 9, 6, 7, 10, 5; 8, 7, 5, 6, 9, 10; 8, 6, 7; 5, 9, 10; 8, 6, 7, 10, 5, 9; 7, 6, 5, 8, 9, 10; 5, 6, 7, 10, 8, 9; 7, 10, 5, 6, 8, 9; எனப் பலபடியாக வுள்ளன. [ரு] 4 நோக்கிய: யோதிய: போககிய. 7 கட்கொன். 8 றுணர்ந்துவென். 16 பெறுபவோ: பெறுவரோ: படுமதோ. [சு] 1 துறையெ. 3 - 4 விருத்தங் கவித்தொகைக். 4 தொகைக்கதைக. 8 கோதையாழ் 9 நறையெ: நறைம: மறைய. 11 வசுணன்றன். 13 பறைய. 14 டித்தது. [எ] 7 தியம்பிய. 12 ஞோர்புகல்: ஞோர்புகழ். 14 மாக்கவி. [அ] 8 மேழ்புழை. 10 வெய்தவர்க். 14 செய்தவர். [கூ] 3 கும்மடப். 6 கீறிடில். 9 - 10 இறையுஞான(மி): பொறையிற் கேள்வி. 10 - 11 நாலுணா ராதவென்: நூலறியாதவென். 13 முறைமை (நூ). 14 - 15 னூலறிந் தாரு: னூலுணர்ந் தாரு.

9 (i). எறிகட லுலகந் தன்னு ளின்றமிழ்ப் புலவர்க் கெல்லா
முறுவலுக் குரியதாக மொழிந்தனன் மொழிந்த வென்சொற்
சிறுமையுஞ் சிலையி ராமன் கதைவழிச் செறித றன்னால்
அறிவுடை மாந்தர்க் கெல்லா மமிழ்தமொத் திருக்கு மன்றே.
(செந்தமிழ். III, 42.)

நால்வழி

௧௦. தேவ பாடையி னிக்கதை செய்தவர்
மூவ ரானவர் தம்முளு முந்திய
நாவி னானுரை யின்படி நான்றமிழ்ப்
பாவி னாலிது ணர்த்திய பண்பரோ. 10

இடம்

௧௧. நடையி னின்றுயர் நாயகன் றோற்றத்தின்
இடைநி கழ்ந்த விராமாவ தாரப்பேர்த்
தொடைநி ரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயிற் றந்ததே. 11

பாயிரம் முற்றும்.

௧. ஆற்றுப்படலம்

௧. ஆச லம்புரி யைம்பொறி வாளியுங்
காச லம்பு முலையவர் **கண்**ணெனும்
பூச லம்பு நெறியின் புறஞ்செலாக்
கோச லம்பனை யாற்றணி கூறுவாம். 12

௨. நீற ணிந்த கடவு ணிறத்தவான்
ஆற ணிந்துசென் றார்கலி மேய்ந்தகிற்
சேற ணிந்த முலைத்திரு மங்கைதன்
வீற ணிந்தவன் மேனியின் மீண்டவே. 13

௩. பம்பி மேகம் பரந்தது பானுவால்
நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினான்
அம்பி னாட்டுது மென்றகன் குன்றின்மேல்
இம்பர் வாரி யெழுந்தது போன்றதே. 14

[௧௦] 1தேவர். 6 ராமவர்: ரன்னவர். 7 தம்முளா. 8 - 9 முந்திய னாவி. 10 னாருரை: னாரூரை: னாலுரை. [௧௧] சில பிரதிகளில் ௯-ன் பின். 4 றோற்றத்தவ். 11 தொல்லைநன்: தொன்மரு. 16 றந்தவே. [௧ *] சிலபிரதிகளில் நாட்டுப் படலத்தின் முதற் செய்யுளாகவுள்ளது. 14 - 15 லம்புன னாட்டணி: லம்புனை நாடது: லம்புன லாற்றணி: லம்புனை யாறது. [௨ *] 4 ணிறத்தவாய். 16 மீண்டதே. [௩] 3 பரந்தன: பரந்துவெம், 4 பானுவின். 10 னாற்றுது. 13-14 இன்ப மாக. 15 யிழிந்தன: யிழிந்தது: யெழுவன: யெழுவது: யெழுந்தன. 16 போன்றவே: போலுமே.

ச. புள்ளி மால்வரை பொன்னென நோக்கிவான்
வெள்ளி வீழிடை வீழ்த்தன தாரைகள்
உள்ளி யுள்ளவெல் லாமுவந் தீயுமவ்
வள்ளி யோரின் வழங்கின மேகமே. 15

ரு. மான நந்தல னாகி மனுநெறி
போன தண்குடை வேந்தன் புகழெனு
ஞான முந்திய நான்மறை யாளர்கைத்
தான மென்னத் தழைத்தது நீத்தமே. 16

சு. தலையு மாகமுந் தாளுந் தழீஇயதி
னிலைநி லாதிறை நின்றது போலவே
மலையி னுள்ளவெல் லாங்கொண்டு மண்டலால்
விலையின் மாதரை யொத்தது வெள்ளமே. 17

எ. மணியும் பொன்னு மயிற்றழைப் பீலியும்
அணியு மானைவெண் கோடு மகிலுந்தண்
இணையி லாரமு மின்னகொண் டேகலால்
வணிக மாக்களை யொத்தது வாரியே. 18

அ. பூநி ரைத்துமென் றாது பொருந்தியும்
தேன ளாவியுஞ் செம்பொன் விராவியும்
ஆனை மாமத வாற்றொ டளாவியும்
வான வில்லை நிகர்த்தது வாரியே. 19

கூ. மலையெ டுத்து மரங்கள் முறித்துமா
டிலைமு தற்பொருள் யாவையு மேந்தலால்
அலைக டற்றலை யன்றணை வேண்டிய
நிலையு டைக்கவி நீத்தமந் நீத்தமே. 20

[சீ] 1 புள்ளின். 3 பொள்ளென: பொம்மென. 4 நோக்கிவான். 6 வீழிட: வீழென: வீழ்திடை. 7 வீழ்ந்தன: வீழ்த்தென: வீழ்வன. 8 தாரைய: வாதரை. 10 புள்ளதெல்: னுள்ளவெல். 16 வானமே. [ரு] 1-3 மானந் தேர்ந்தனனாகி. 2-3 நேர்ந்தற நோக்கி: நேர்ந்தறநோக்கு: நேர்ந்தவனாக: னேந்தறநோக்கி: முந்துறநோக்கி. 3 னாக. 6 தண்கொடை. 7 வேந்தர். 9 நான. 10 முந்தற: முன்னிய. 15 தழைத்தன. [சு] 4 தழீஇயதன். 5-6 னிலைநிலாநிறை: னிலையிலாநிறை. 8 போலவும். 10 னுள்ளதெல். 15 யொத்ததவ். [எ] 6 மாலைவெண். 8 மகிலுநல்: மகிலுந்தன். 13 வணிகர். 15 யொத்தன: யொத்ததவ். [அ] 1-2 பூநிரைத்தமென்: பூநிரந்துமென். 5-6 தேன்வளாவியுஞ். 7-8 செம்பொ னளாவியும். 9-12 ஆனைமாய்தர வானின ளாவியும்; மானமாமணி யும்வரன் றேகலால்: மான மாமணி யும்வகிர்ந் தேகலால்: மானமானமணி வரன்றேகலால்: ஏனை மாமணியும் வரன்றேகலால்: ஏனை மாமணி யும்வகிர்ந் தேகலால். 11-12 வாற்றினளாவியும். 15 நிகர்த்தன: நிகர்த்ததவ். [கூ *] சில பிரதிகளில் கக-ன் பின். 4 பறித்துமா: தரித்துமா. 11 யாண்டைகை. 15 யொத்ததக்: யொத்தது.

கo. ஈக்கள் வண்டொடு மொய்ப்ப வரம்பிகந்
தூக்க மேமிக வுட்டெளி வின்றியே
தேக்கெ றிந்து வருதலிற் றீம்புனல்
வாக்கு தேனுகர் மாக்களை மானுமே. 21

கக. பணைமு கக்களி யானைபன் மாக்களோ
டணிவ குத்தென வீர்த்திரைத் தார்த்துவெண்
மணிநு ரைக்கொடி தோன்றவந் தூன்றலின்
புணரி மேற்பொரப் போவதும் போன்றதே. 22

கஉ. இரவி தன்குலத் தெண்ணில்பல் வேந்தர்தம்
புரவு நல்லொழுக் கின்படி பூண்டது
சரயு வென்பது தாய்முலை யன்னதிவ்
வுரவு நீர்நிலத் தோங்கு முயிர்க்கெலாம். 23

கங. கொடிச்சிய ரிடித்த சுண்ணங் குங்குமங் கோட்ட மேலம்
நடுக்குறு சந்தஞ் சிந்து ரத்தொடு நரந்த நாகம்
கடுக்கைநாள் வேங்கை கோங்கு பச்சிலை கண்டில் வெண்ணெய்
அடுக்கலி னளிந்த செந்தே னகிலொடு நாறு மன்றே. 24

கச. எயினர்தஞ் சீறா ரப்பு மாரியி னிரியல் போக்கி
வயின்வயி னெயிற்றி மாதர் வயிறலைத் தோட வோடி
அயின்முகக் கணையும் வில்லும் வாரிக்கொண் டலைக்கு நீராற்
செயிர்தருங் கொற்ற மன்னர் சேனையை மானு மன்றே. 25

[கo] 3 மொய்க்க: மோப்ப. 4 வரம்பிகழ்ந். 6-7 மேமிகுந் துட்டெளி: மேமிகுத் துட்டெளி. 13 வாக்குந். 15-16 மக்களை மானுமால். [கக] சில பிரதிகளில் அ-ன் பின். 6 குத்தன. 7-8 வீரத்திஞர்த்தலில். 8 தார்த்தலின்: தார்த்தலும்: தார்த்தன: தார்தலின்: தார்ந்தணி· தார்த்தள்ளி: தார்த் திழீஇ. 9-10 மணிநிரைக்கொடி: மணியுடைக்கொடி. 11-12 வந்துமுந் தூன்றலாற்: தோன்ற வயங்கலாற். 12 தூன்றலாற். 14-15 மேற்போர் பொருவது. 14 யைப்பொரப். 15 போவது: போதுவ: போவன. 16 போன் றவே: போலுமே. [கஉ] 2 நற்குலத்: யின்குலத். 4 வேந்தரும். 5 பரவு. 12-13 யக்கதியுரவு. 14 நீணிலத்: நன்னிலத். 15 தொல்கு. [கங] 7 நடுக் குறுஞ். 8 சாந்தஞ்: சிந்தஞ். 11 நரந்தை. 13 கடுக்கையார். 20 னிசைந்த: னழிந்த: னடுத்த. 21 தீந்தே. [கச] 1 எயினர்வாழ். 6 போக: போக்கு: போகி. 8 னெற்றி: னேறி. 9 மார்தம். 12 வேண்டி. 16 வாரிகொண். 19 செயம்வரும்: செயமரும்: செயலதரும்: செயலரும்: செயிரறும்: 22 சேனையு.

கரு. செறிநறுந் தயிரும் பாலும் வெண்ணெயுஞ் சேர்ந்த நெய்யும்
உறியொடு வாரி யுண்டு குருந்தொடு மருத முந்தி
மறியுடை யாயர் மாதர் வளைதுகில் வாரு நீராற்
பொறிவரி யரவி னுடும் புனிதனும் போன்ற தன்றே. 26

கசு. கதவினை முட்டி மள்ளர் கையெடுத் தார்ப்ப வோடி
நுதலணி யோடை பொங்க நுகர்வரி வண்டு கிண்டத்
ததைமணி சிந்த வுந்தித் தறியிறத் தடக்கை சாய்த்து
மதமழை யானை யென்ன மருதஞ்சென் றடைந்த மாதோ. 27

கஎ. முல்லையைக் குறிஞ்சி யாக்கி மருதத்தை முல்லை யாக்கிப்
புல்லிய நெய்த றன்னைப் பொருவரு மருத மாக்கி
எல்லையில் பொருள்க ளெல்லா மிடைதடு மாறு நீராற்
செல்லுறு கதியிற் செல்லும் வினையெனச் சென்ற தன்றே. 28

கஅ. காத்தகான் மள்ளர் வெள்ளக் கலிப்பறை கறங்கக் கைபோய்ச்
சேத்தநீர்த் திவலை பொன்னு முத்தமுந் திரையின் வீசி
நீத்தம்வான் றலைய வாகி நிமிர்ந்துபார் கிழிய நீண்டு
கோத்தகா லொன்றி னொன்று குலமெனப் பிரிந்த மாதோ. 29

ககூ. கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையின் மறைக ளாலு மியம்பரும் பொருளீ தென்னத்
தொல்லையி னொன்றே யாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயஞ் சொல்லும் பொருளும்போற் பரந்ததன்றே.

உ0. தாதுகு சோலை தோறுஞ் சண்பகக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதுமணத் தடங்க டோறும்
மாதவி வேலிப் பூக வனந்தொறும் வயல்க டோறும்
ஓதிய வுடம்பு தோறு முயிரென வுலாய தன்றே. 31

ஆற்றுப்படலம் முற்றும்.

[கரு] 5 தெளிந்த: சேர்ந்த. 7 உறியொடும். 13 மறியிடை: மறிவிழி. 16 வளைதுகில். 17 கவரு. 22-24 புனிதனைப் பொருவு மன்றே. 23-24 போலுமன்றே. [கசு] 6 வேகி: வெய்தி. 10-12 (ப்)புகர்முக வண்டொடத். 12. தீண்டத். 14 சிந்தி: சிதறி. 19 மதமலை: மதமளா. 24 தன்றே. [கஎ] 13 எல்லையிற். 19 செல்லிய. 20 கதியுட். 23-24 செல்லுமன்றே. [கஅ] 3 வெள்ளங். 7 சேர்த்தநீர்த். 10 முத்தொடு. 12 வீச. 13-15 நீத்தமாந் தலைய வாகி: நீத்தமான் றலைய தாகி. 16 நிமிர்ந்தபார்: நிமிர்ந்தகார். 17 கிழித்து. 17-18 நிரம்பமீண்டு. 19 கோத்ததா. 20 - 21 லொன்றோ டொன்றின்: லொன்றோ டொன்றிக்: லொன்றோ டொன்று. 23 பிறிந்த. 24 வன்றே; தன்றே. [ககூ] 1 - 2 கல்லிடைக் கிடந்து. 5 கலந்து. 9 ளெல்லா. 15 யாகத். 17 பிரிந்த: விரிந்த. 24 வன்றே. [உ0] 4 சந்தனக். 5 காவு. 10-11 புதுமணற் றடங்க.

உ. நாட்டுப்படலம்

க. வாங்கரும் பாத நான்கும் வகுத்தவான் மீகி யென்பான்
தீங்கவி செவிக ளாரத் தேவரும் பருகச் செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை யன்பெனு நறவ மாந்தி
மூங்கையான் பேச லுற்றா னென்னயான் மொழிய லுற்றேன். 32

உ. வரம்பெலா முத்தந் தத்து மடையெலாம் பணில மாநீர்க்
குரம்பெலாஞ் செம்பொன மேதிக் குழியெலாங் கழுநீர்க் கொள்ளை
பரம்பெலாம் பவளஞ் சாலிப் பரப்பெலா மன்னம் பாங்கர்க்
கரும்பெலாஞ் செந்தேன் சந்தக் காவெலாங் களிவண் டீட்டம்.

ங. ஆறுபா யரவ மள்ள ராலைவா யமலை யாலைச்
சாறுபா யோதை வேலைச் சங்கின்வாய்ப் பொங்கு மோசை
ஏறுபாய் தமர நீரி லெருமைபாய் துழனி யின்ன
மாறுமா றாகிப் பாடன் மயங்குமா மருத வேலி. 34

ச. தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கண் முழவி னேங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ. 35

ரு. தாமரைப் படுவ வண்டுந் தகைவருந் திருவுந் தண்டார்க்
காமுகர்ப் படுவ மாதர் கண்களுங் காம னம்பும்
மாமுகிற் படுவ வாரிப் பவளமும் வயங்கு முத்தும்
நாமுதற் படுவ மெய்யு நாமனூற் பொருளு மன்னோ. 36

சு. நீரிடை யுறங்குஞ் சங்க நிழலிடை யுறங்கு மேதி
தாரிடை யுறங்கும் வண்டு தாமரை யுறங்குஞ் செய்யாள்
தூரிடை யுறங்கு மாமை துறையிடை யுறங்கு மிப்பி
போரிடை யுறங்கு மன்னம் பொழிலிடை யுறங்கு மேகம். 37

[க] 5-6 மீகனென்பான். 7 தீங்கறச். 17 நறவை. 19 மூங்கையார். 22 றென்னயான்: லென்னயான். [உ] 19 கரம்பெலாஞ். [ங] 4 ராலையா. 8 யோசை. 10 சங்குவாய். 12 மோதை. 20 றூடிப். 20-21 றூடித் தம்மின். 21 பாடை: பாடின். 22 மயங்குமால்: வயங்குமா. [ச] 3 ளாலத்: 5 - 6 விளக்கமேந்தக்: விளக்கதாகக். 7 கொண்டலை. 9 ஞேங்கக. 14 யெழுனி. 16 தேம்பின: தேம்பொழி: தேன்பொழி. 23 - 24 றிருந்தமன்னோ. [ஐ - கக] வைப்புமுறை சு, அ, எ, ஓ, கO, கக, க; சு, எ, ஓ, அ, கO, கக, க; அ, எ, சு, ஓ, கO, கக, க: என்றுங் காணப்படுகிறது. [ஓ *] சில பிரதிகளில் சு-ன் பின். 4 தகைபெறுங். 8, 14, 20 படுப. 22 நாமனும். [சு] 3 சங்கு. 23 - 24 யுறங்குந் தோகை.

எ. படையுழ வெழுந்த பொன்னும் பணிலங்க ளுயிர்த்த முத்தும்
இடையிடை பரம்பிற் காந்து மினமணித் தொகையு நெல்லின்
மிடைபசுங் கதிரு மீன்ற மென்றழைக் கரும்பும் வண்டும்
கடைசியர் முகமும் போதுங் கண்மலர்க் தொளிரு மாதோ. 38

அ. தெள்விளிச் சிறியாழ்ப் பாணர் தேம்பிழி நறவ மாந்தி
வள்விசிக் கருவி பம்ப வயின்வயின் வழங்கு பாடல்
வெள்ளிவெண் மாடத் தும்பர் வெயில்விரி பசும்பொற் பள்ளி
எள்ளருங் கருங்கட் டோகை யின்றுயி லெழுப்பு மன்றே. 39

கூ. ஆலைவாய்க் கரும்பின் றேனு மரிதலைப் பாளைத் தேனும்
சோலைவாய்க் கனியின் றேனுந் தொடையவி ழிறாலின் றேனும்
மாலைவா யுகுத்த தேனும் வரம்பிகந் தோடி வங்க
வேலைவாய மடுப்ப நங்கி மீனெலாங் களிக்கு மன்றே. 40

கo. பண்கள்வாய் மிழற்று மின்சொற் கடைசியர் பரந்து நீண்ட
கண்கைகான் முகம்வா யொக்குங் களையலாற் களையி லாமை
உண்கள்வார் கடைவாய் மள்ளர் களைகலா துலோவி நிற்பார்
பெண்கள்பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியோர்பெற்றால்.

கக. புதுப்புனல் குடையு மாதர் பூவொடு நாவி பூத்த
கதுப்புறு வெறியே நாறுங் கருங்கடற் றரங்க மென்றால்
மதுப்பொதி மழலைச் செவ்வாய்வாட்படைக் கண்ணின்மைந்தர்
விதுப்புற நோக்கு மன்னார் மிகுதியை விளம்ப லாமே. 42

கஉ. வெண்டளக் கலவைச் சேறுங் குங்கும விரைமென் சாந்துங்
குண்டலக் கோதை மாதர் குடைந்தநீர்க் கொள்ளைச் சாற்றிற்
றண்டலைப் பரப்புஞ் சாலி வேலியுந் தழீஇய வைப்பும்
வண்டலிட் டோட மண்ணு மதுகர மொய்க்கு மாதோ. 43

[எ] 5 ளுதிர்த்த: ளுகுத்த. 7 இடறிய. 8 வரம்பிற். 11-12 தொகையி லெல்லு. 12-15 நெல்லு மிடைபசுங் கதிர்க ளீன்ற. 14 - 15 கதிருமீனு. 16 மென்கழைக். 24 மன்னோ. [அ] 5 நறவை. 11 வழங்கும்: வயங்கும். 15 துச்சி. [கூ] 1 ஆலைபாய். 7 சோலைவீழ். 8 மலரின். 10 தொடையிழி: தொடையழி. 16 வரம்பிகழ்ந். 18 யேங்க. 21 வுணடு: வேலை. 23 களிப்ப. 24 மாதோ. [கo] 7 கண்கள்கான். 13 உண்கள்வாய். 16 களைகிலா. 17-18 துலோவுகிற்டார். 17 துலோபி: துலாவி: ருலாவி. [கக] 4 போதொடு. 7 கதுப்புற கதுப்பொடு. 13 மதுப்பொழி. 16 வாட்கடைக். 19 விதிர்ப்புற: விதிப்புற: விதுப்புறு: வெதுப்புற. 20 நோக்க. 21 மின்னார். [கஉ] கோல. 9 மைந்தர். 10 குடைந்தநீர்: அடைந்தநீர்க். 11 கொள்ளை: கொள்ளச். 12 சாற்றின்: சேற்றிற். 16-18 வேலியின் றாளக் கொத்தின். 17-18 றாளக் கொத்தும். 18 வைப்பின். 20 போடு: பாட: பரடு.

கங. பொருந்திய மகளி ரோடு வதுவையிற் பொருந்து வாரும்
பருந்தொடு நிழல்சென் றன்ன வியலிசைப் பயன்றுய்ப் பாரும்
மருந்தினு மினிய கேள்வி செவியுற மாந்து வாரும்
விருந்தினர் முகங்கண் டன்ன விழாவணி விரும்பு வாரும். 44

கச. கறுப்புறு மனமுங் கண்ணிற் சிவப்பொடு சூட்டுங் காட்டி
உறுப்புறு படையிற் றாக்கி யுறுபகை யின்றிச் சீறி
வெறுப்பில களிப்பின் வெம்போர் மதுகைய வீர வாழ்க்கை
மறுப்பட வாவி பேணு வாரணம் பொருத்து வாரும். 45

கரு. எருமைநா கீன்ற செங்க ணேற்றையோ டேற்றை சீற்றத்
துருமிவை யென்னத் தாக்கி யூழுற நெருக்கி யொன்றாய்
விரியிரு ளிரண்டு கூறாய் வெகுண்டன வினைய நோக்கி
அரியினங் குஞ்சி யார்ப்ப மஞ்சுற வார்க்கின் றாரும். 46

கசு. முள்ளரை முளரி வெள்ளை முளையிற முத்தும் பொன்னுந்
தள்ளுற மணிகள் சிந்தச் சலஞ்சலம் புலம்பச் சாலிற்
றுள்ளிமீன் றுடிப்ப வாமை தலைபுடை சுரிப்பத் தூம்பி
னுள்வரா லொளிப்ப மள்ள ருழுபக டேப்பு வாரும். 47

கஎ. சேலுண்ட வொண்க ணாரிற் றிரிகின்ற செங்கா லன்னம்
மாலுண்ட நளினப் பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத் தேரைதா லாட்டும் பண்ணை. 48

கஅ. குயிலினம் வதுவை செய்யக் கொம்பிடைக் குனிக்கு மஞ்ஞை
அயில்விழி மகளி ராடு மரங்கினுக் கழகு செய்யப்
பயில்சிறை யரச வன்னம் பன்மலர்ப் பள்ளி நின்றுந்
துயிலெழத் தும்பி காலைச் செவ்வழி முரல்வ சோலை. 49

[கங - கஅ] வைப்புமுறை கஎ, கஅ, கங-கசு என்றுமுள்ளது. [கங] 3 ராடு. 4 வதுவையுட். 9 றென்ன. 13-14 மருந்தெனவுதவு. 14 முதவுங். 21 டென்ன. [கச] 1 கறுப்புடை. 4 சிவப்பொடு. 7 உறுப்புடை. 9 றாகி. 11 யின்றிச். 13 வெறுப்பின: வெறுப்புடைக். 16. மதுகையின்: மதுகையர். 18 வாக்கை. 19 மறுப்படா. 21 பேண. 23 பொருது. [கரு] 4-5 ணேற்றினோ டேற்றை. 5 டேற்றைச். 10 யூடேற. 10 - 11 யூழறநோக்கி. 16-17 வெகுண் டென வதனை. 17 வினையை: வனைய: வதனை. 22 வஞ்சுற: மைந்துற. [கசு] 3 வெள்ளி. 4 முளையற. 9 சிந்திச்: முந்தச்.13 றுள்ளுமீன். 14 றுடிக்க. [கஎ] 2-3 வுண்கணாரிற். 18 சேர்ந்த: சோர்ந்து. 22-23 தேரை பாராட்டும், [கஅ] 3 செய்யுங். 5 குதிக்கு. 16 பனிமலர்ப்: பைம்மலர்ப். 18 நின்று. 21 யீட்டஞ்: காலச்.

௧௯. முந்துமுக் கனியி னொடு முதிரையின் முழுத்த நெய்யிற்
செந்தயிர்க் கண்டங் கண்ட மிடைபடச் செறிந்த சோற்றிற்
றந்தமி லிருந்து தாமும் விருந்தொடு தமதுண் டென்ன
அந்தண ரமுத வுண்டி யயில்வுறு மமலைத் தெங்கும். 50

௨௦. முறையறிந் தவாவி னீங்கி முனிவுழி முனிந்து வெஃகும்
இறையறிந் துயிர்க்கு நல்கு மிசைகெழு வேந்தன் காக்கப்
பொறைதவிர்ந் துயிர்க்குந் தெய்வப் பூதல மதனிற் பொன்னின்
நிறைபரஞ் சொரிந்து வங்க நெடுமுது காற்று நெய்தல். 51

௨௧. எறிதரு மரியின் சும்மை யெடுத்துவா னிட்ட போர்கள்
குறிகொளும் போத்திற் கொல்வார் கொன்றநெற் குவைகள் செய்வார்
வறியவர்க் குதவி மிக்க விருந்துண மனையி னுய்ப்பார்
நெறிகளும் புதையப் பண்டி நிரைத்துமண் ணெளிய வூர்வார்.

௨௨. கதிர்படு வயலி னுள்ள கடிகமழ் புனலி னுள்ள
முதிர்பயன் மரத்தி னுள்ள முதிரைகள் புறவி னுள்ள
பதிபடு கொடியி னுள்ள படிவளர் குழியி னுள்ள
மதுவள மலரிற் கொள்ளும் வண்டென மள்ளர் கொள்வார்.

௨௩. பருவ மங்கையர் பங்கய வாண்முகத்
துருவ வுண்கணை யொண்பெடை யாமெனக்
கருதி யன்பொடு காமுற வைகலும்
மருத வேலியின் வைகின வண்டரோ. 54

[௧௯] சில பிரதிகளில் ௨௨-ன் பின. 2 - 3 கனியுமாறு: கனியுநாறு. 4 முதிரையு. 6 நெய்யுஞ். 7 - 8 செந்தயி ரொடுதேன். 10 முதலிய: மிடையிடை: முடைபடச். 16 - 17 விருந்துகல் லமுதுண்: விருந்தொடு மமுதுண்: விருந்துட னமிழ்துண். 17 தமருண். 17 - 18 தமரி னோடும். 19 - 21 அந்தணர் முதலோ ருண்டி. 20 ரமிழ்த. 22 யயர்வுறு. 23 - 24 மமலை யெங்கும். [௨௦] 2-3 தவாவை நீக்கி: தயாவை நீக்கி: தவாவு நீங்கி. 6 வேட்கும். 7 - 10 நிறையறிந் துயிர்க்கு நல்கு நிலமிசை. 10 மிசை யெழு: மிருநில. 11 - 12 வேந்த னென்னப். 12 காக்கும். 13 பொறைய றிக்: பொறையிரங். 16-17 பூதலந் தன்னிற். 20 சொரிந்த. 24 மன்றே. [௨௧] 4 யெடுத்தவ: யெடுத்தவா: யெடுத்துளா. 5 ரிட்ட. 7-10 குறிகளும் போற்றிக்கொள்வார் கொண்டநெற். 16 தவரவர். 18 னுய்ப்பான். 19 நிறை களும். 22 நிறைத்துமண். [௨௨] 4 கடிசெறி. 5 பொழிலி: புனத்தி. 7 முதிர் பல. 7 - 12 முதிரைகள் புறவினுள்ள முதுபயன் மரத்தி னுள்ள 19 மது வன. 20 மதனிற். [௨௩] 4 வான்முகத். 6 வொண்கணை: வேற்கணை. 11 காமுற்று: காமுகர்.

௨௪. ஈர நீர்படிந் திந்நிலத் தேசில
காரக ளென்ன வருங்கரு மேதிகள்
ஊரி னின்றகன் றுள்ளிட மென்முலை
தாரை கொள்ளத் தழைப்பன சாலியே. 55

௨௫. தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவு
மாய வெள்வளை வாய்விட் டரற்றவுந்
தேயு நுண்ணிடை சென்று வணங்கவும்
ஆயர் மங்கைய ரங்கை வருந்துவார். 56

௨௬. தினைச்சி லம்புவ தீஞ்சொ லிளங்கிளி
நனைச்சி லம்புவ நாகிள வண்டுபூம்
புனற்சி லம்புவ புள்ளினம் வள்ளியோர்
மனைச்சி லம்புவ மங்கல வள்ளையே. 57

௨௭. வள்ளி கொள்பவர் கொள்வன மாமணித்
துள்ளி கொள்வன தூங்கிய மாங்கனி
புள்ளி கொள்வன பொன்விரி புன்னையிற்
பள்ளி கொள்வன பங்கயத் தன்னமே. 58

[௨௩ - ௪௧] வைப்புமுறை: ௨௩, ௨௯, ௨௪, ௨௬, ௩௧, ௩௦, ௨௫, ௩௫, ௨௮, ௨௭, ௩௬, ௪௦, ௪௧, ௩௩, ௩௨, ௩௪, ௩௭, ௩௮, ௩௯; ௨௩ - ௨௬, ௨௯, ௨௭, ௩௦, ௨௮, ௩௧, ௩௨, ௩௩ - ௪௧; ௨௩ - ௨௭, ௩௫, ௨௮, ௨௯, ௩௬, ௩௦ - ௩௪, ௩௭, ௩௯, ௩௮, ௪௦, ௪௧; ௨௩ - ௨௭, ௩௫, ௨௯, ௨௮, ௩௬, ௩௦ - ௩௪, ௩௭ - ௪௧; ௨௩ - ௨௭, ௨௯, ௩௫, ௨௮, ௩௬, ௩௦ - ௩௪, ௩௭ - ௪௧; ௨௩, ௨௯, ௨௪, ௩௧, ௩௦, ௨௫, ௪௦, ௩௫, ௨௬, ௨௮, ௨௭, ௩௬, ௪௧, ௩௩, ௩௨, ௩௪, ௩௭ - ௩௯; ௨௩ - ௨௫, ௩௨, ௨௬, ௨௧, ௩௫, ௨௮, ௩௬, ௩௧, ௩௩, ௩௪, ௩௭ - ௪௧; ௨௩ - ௨௬, ௨௯, ௩௫, ௨௭, ௩௯, ௨௮, ௩௦, ௩௧, ௩௩, ௩௨, ௩௪, ௩௭ - ௪௧; ௨௩ - ௨௫, ௨௯, ௨௬, ௨௮, ௩௦ - ௪௧; ௨௩, ௨௪, ௩௧, ௩௦, ௨௫, ௪௦, ௩௫, ௨௬, ௨௮, ௨௭, ௩௬, ௪௧, ௩௩, ௩௨, ௩௪, ௩௭ - ௩௯; ௨௩ - ௩௧, ௩௩ - ௩௬, ௩௮, ௩௭, ௩௯ - ௪௧; ௨௩ - ௨௬, ௨௯, ௨௭, ௨௮, ௩௦ - ௪௧; ௨௩ - ௨௫, ௩௨, ௨௬, ௨௭, ௨௯, ௩௫, ௨௮, ௩௬, ௩௦, ௩௧, ௩௩, ௩௪, ௩௭ - ௪௧. [௨௪] 4 தேசெலக். 11 றன்னிட. 12 மென்முலைத்: வுண்முலைத்: வொண்முலைத். [௨௫] 3 மத்தொலித்: மத்தடு. 4 துள்ளல்போய்: துள்ளலை. 5 ஆய. 8 டழைப்பவும். 12 வருந்தவும். 13 ஆய. 16 வருத்துவார். [௨௬] 2, 6, 10, 14 லம்புறு. 8 வண்டுகள். 9 புனைச்சி. [௨௭ *] 4 மாமணி. 9 வெள்ளி. 12 புன்னைகள்.

உஅ. கன்று டைப்பிடி நீக்கிக் களிற்றினம்
வன்றொ டர்ப்படுக் கும்வன வாரிசூழ்
குன்று டைக்குல மள்ளர் குழூஉக்குரல்
இன்று ணைக்களி யன்ன மிரிக்குமே. 59

உகூ. வேளை வென்ற வுழத்தியர் வெம்முலை
ஆளை நின்று முனிந்திடு மங்கொர்பாற்
பாளை தந்த மதுப்பரு கிப்பரு
வாளை நின்று மதர்க்கு மருங்கெலாம். 60

௩0. சூட்டு டைத்தலைத் தூநிற வாரணம்
தாட்டு ணைக்குடை யத்தகை சான்மணி
மேட்டி மைப்பன மின்மினி யாமெனக்
கூட்டி னுய்க்குங் குரீஇயின் குழாமரோ. 61

௩க. முட்டி லட்டின் முழங்குற வாக்கிய
நெட்டு லைக்கழு நீர்நெடு நீத்தந்தான்
பட்ட மென்கமு கோங்கும் படப்பைபோய்
நட்ட செந்நெலி னூறு வளர்க்குமே. 62

௩உ. பிறைமு கத்தலைப் பெட்பி னிரும்புபோழ்
குறைந றைக்கறிக் குப்பை பருப்பொடு
நிறைவெண் முத்தி னிறத்தரி சிக்குவை
உறைவ கோட்டமி னூட்டிடந் தோறெலாம். 63

[உஅ] 1-2 கன்றொ டப்பிடி. 7 கும்வள. 10 டைக்குரல். 12 குழுக் குரல். 13-14 இன்றொ டர்க்களி. 14 ணைக்கழி: டைக்களி. [உக *] உகூ-ன் பின். 3 முகத்தியர்: விழிச்சியர். 6 வென்று. 8 மாங்கொர்பாற். [௩0 *] 2 டைத்துணைத். 3 (ச்)செந்நிற. 2 டைத்துழைத். 3 தூய்நிற. 4 வாரணத். 5-6 தாட்டணிற் குடை. 6 டைக்குடை: ணைக்குழை: ணைக் கடை. 7 யுந்தகை: யுந்தை. 12 யாமெனுக். 14 லுய்க்குங். 15 குரீஇக்: குருவிக்: குருகுக்: 16 குழாமெலாம். [௩க] 3 முழக்குற. 4 வாகிய. 5-6 நெட்டி லைக்கழி. 7 நீர்நிறை: நீரொடு. 8 நீத்தம்போய்ப்: நீர்த்ததான், 11 கோங்கு. [௩உ *] 5-6 குறைக றித்திரள். 7 குப்பைப். 8 பரப்பொடு. 10 முத்த. 11 னிகரரி: னிறைத்தரி. 13 உறுவ: உறையில்: உறைவை. 14-15 கொட்பின வூட்டிடங்: கோட்டன மூட்டுவ: கொட்பினி னூட்டிடங்: கோட்டின வூட்டிடர். 16 தோறுமே.

௬௩. பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே. 64

௬௪. கலஞ்சு ரக்கு நிதியங் கணக்கிலா
நிலஞ்சு ரக்கு நிறைவள நன்மணி
பிலஞ்சு ரக்கும் பெறுதற் கரியதங்
குலஞ்சு ரக்கு மொழுக்கங் குடிக்கெலாம். 65

௬௫. துருவை மென்பிணை யீன்ற துளக்கிலா
வரிம ருப்பிணை வன்றலை யேற்றைவான்
உருமி டித்தெனத் தாக்குறு மொல்லொலி
வெருவி மால்வரைச் சூன்மழை மின்னுமே. 66

௬௬. கொன்றை வேய்ங்குழற் கோவலர் முன்றிலிற்
கன்று றக்குங் குரவைக் கடைசியர்
புன்ற லைப்புனங் காப்பிடை போதரச்
சென்றி சைக்கு துளைச்சியர் செவ்வழி. 67

௬௭. கூற்ற மில்லையொர் குற்றமி லாமையாற்
சீற்ற மில்லைத்தஞ் சிந்தையின் செம்மையால்
ஆற்ற னல்லற மல்லதி லாமையால்
ஏற்ற மல்ல திழித்தக வில்லையே. 68

[௬௩] ௬௪-ன் பின். 7-8 கல்வியிற் பூத்தலும். 8 பூத்தலும்: பூத்ததால், 11 கீதலும். 14 மின்றி. 15 விழைவன. 16 யாவையோ. [௬௪] 2, 6 ரக்க. 3 நெதியங். 7 நிறைவளர்· நிரைவள: நிறையன. 8 நன்மணிப்: மாமணி: நீண்மணி. 9 பெலஞ்சு. [௬௫] 5-6 வரும ருப்பின. 6 ருப்புயர்: ருப்பின. 6-7 ருப்பி னகன்றலை. 8 யேறுவான்· யேற்றுவான். 12 மோதையின். 14 மாமலைச். 15 சூழ்மழை. 16 மின்னுமால்: துன்னுமால். [௬௬] 6 வக்குங்: ரப்புங். 7 குரவை. 11 காப்புடைப்: காப்புடை: காப்பிடைப்: காப்பிசை. 12 போதராச: போர்த்தரச். 13-14 சென்று ழைக்கு: சென்றி ழைககு. 16 செல்வழி. [௬௭] 3 குற்றமில். 6-7 மில்லைதஞ் சிந்தையின்: மில்லைத் தன் சிந்தைநற். 7 சிந்தையிற். 8 செய்கையால்· செவ்வியால். 9-10 ஆற்று நல்லற: ஆற்ற நல்லற. 14 மனறி. 15 திழிதக: திழிதக்க. 16 வல்லதோ: வில்லரோ.

ருஅ. நெறிக டந்து படர்ந்தன நீத்தமே
குறிய ழிந்தன குங்குமத் தோள்களே
சிறிய மங்கையர் தேயு மருங்குலே
வெறிய வும்மவர் மென்மலர்க் கூந்தலே. 69

ருகூ. அகிலி டும்புகை யட்டி லிடும்புகை
நகலி ளுலை நறும்புகை நான்மறை
புகலும் வேள்வியிற் பூம்புகை யோடளாய்
முகிலின் விம்மி முயங்கின வெங்கணும். 70

ச0. குற்ற பாகு கொழிப்பன கோணெறி
கற்றி லாத கருங்க ணுளைச்சியர்
முற்றி லார முகந்துதம் முன்றிலிற்
சிறறில் கோலிச் சிதறிய முத்தமே. 71

சக. சேம்பு காலிறச் செங்கழு நீர்க்குளத்
தூம்பு காலச் சுரிவளை மேய்வன
காம்பு கால்பொரக் கண்ணகன் மால்வரைப்
பாம்பு நான்றெனப் பாய்பசுந் தேறலே. 72

சஉ. இயல்புடை பெயர்வன மயின்மணி யிழையின்
வெயில்புடை பெயர்வன மிளிர்முலை குழல்போற்
புயல்புடை பெயர்வன பொழிலவர் விழிபோற்
கயல்புடை பெயர்வன கடிகமழ் கழனி. 73

[ருஅ] 1 - 3 நெறிப ரந்து கடந்தன. 3 படர்ந்தது: பரந்தது: பரந்தன. 6 ழிந்தது. 6 - 8 ழிந்தது குங்குமக கொங்கையே. 10 நங்கையர். 13-14 வெறியு மேயவர். [ருகூ] 1 அகலி. 1-2 அகினெ டும்புகை. 4 லடும் புகை. 5 நகிலி. 5-6 நகரி லாலை. 8 காவலர். 14 - 16 மின்னி முழங்குவ தெங்கணும். 15 முழங்கின: முழங்குவ: முழங்கிய. 16 வெங்குமே. [ச0] 1-2 குற்ற மாகும்: குற்ற மாகக். 3 கொழிப்பவர்: கொழிப்பெனக: கொழிப்பது: 6 லாரக். 8 ளுழத்தியர். 14 கோலச். [சக *] 2 கால்பொரச்: கால்பெறச்: கால்பொரு. 4 நீர்க்குளம். 14 நான்றன: ஞான்றெனப். [சஉ - ருக] வைப்புமுறை· சஉ, சரு, சங, சகூ, சச, சஎ, சஅ - ருக; சஉ, சரு, சங, சச, சகூ - ருக. [சஉ] 1 எயில்புடை. 3 வயின்மணி: யினமணி: மயிலணி. 5 குயில்புடை. 7 முலைவிரி· முலையவர்: விளமுலை: விளர்முலை. 8-16 விழிபோற் கயல்புடை பெயர்வன கழனிகள் குழல்போற் புயல்புடை பெயர்வன கடிகமழ பொழில்கள். 8 குழலிற். 11 பொருமிரு. 12 விழியிற்.

௪௩. இடையிற மகளிர்க ளெறிபுனன் மறுகக
குடைபவர் துவரித ழலர்வன குமுத
மடைபெய ரனமென நடைபயி லளகக்
கடைசியர் முகமென மலர்வன கமலம். 74

௪௪. விதியிணை நகுவன வயில்விழி பிடியின்
கதியிணை நகுவன வவர்நடை கமலப்
பொதியிணை நகுவன புணர்முலை கலைவாழ்
மதியிணை நகுவன வனிதையர் வதனம். 75

௪௫. பகலினொ டிகலுவ படர்மணி மடவார்
நகிலினொ டிகலுவ நளிவள ரிளநீர்
துகிலினொ டிகலுவ சுதைபுரை நுரைகார்
முகிலினொ டிகலுவ கடிமண முரசம். 76

௪௬. காரொடு நிகர்வன கடிபொழில் கழனிப்
போரொடு நிகர்வன புணர்மலை யணைசூழ்
நீரொடு நிகர்வன நிறைகட னிதிசால்
ஊரொடு நிகர்வன விமையவ ருலகம். 77

௪௭. நென்மலை யல்லன நிரைவரு தரளஞ்
சொன்மலை யல்லன தொடுகட லமிர்த
நன்மலை யல்லன நதிதரு நிதியம்
பொன்மலை யல்லன மணிபடு புளினம். 78

௪௮. பந்தினை யிளையவர் பயிலிட மயிலூர்
கந்தனை யனையவர் கலைதெரி கழகஞ்
சந்தன வனமல சண்பக வனமாம்
நந்தன வனமல நறைவிரி புறவம். 79

[௪௩] 1 இடையிள. 6 - 7 துவரிதழ் மலர்வன. 9 - 10 மடைசெறி யனமென: மடைபெடை யனமென: மடநடை யனமென: மடமுறு மனமென. 11 - 12 மடநடை யிளகக: மடநடை யளகக்: மடநடை யிளகும்: மடநடை பயிலும். [௪௪] 3 விழியிணை. 12 கலைவாண்: கலைவான். [௪௫] ௪௯-ன் பின்: ௪௨-ன் பின். 5 நகலினொ. 7 நளிர்வள: நளிவள. 11 சுதைபொரு: சுதைவரு: சுரைபுரை. 11 - 12 சுதைபொழி றுயில்கார்: சுதைபொழி நுரைகள். 12 நிரைகார். 15 கடிமணி: கடிகமழ். 16 முரசும். [௪௬] 3 கமழ்பொழில். 7 பொலன்வரை: புணர்முலை. 8 பணைசூழ். [௪௭] 3 நிறைவரு: நிரைதகு: நிரைதரு. 4 தரளச். 4 - 5 தரளந் தொன்மலை: தரளத் தொன்மலை. 8 லமுதின்: லமுத. 11 நளிதரு. 12 நிதியப், [௪௮] 1-2 பந்தினை விரலியர். 3 பயில்விட: பயிலிட. 10, 14 வனமலர். 15 நறவிரி.

௪௯. கோகில நவில்வன விளையவர் குதலைப்
பாகியல் கிளவிக ளவர்பயி னடமே
கேகய நவில்வன கிளரிள வளையின்
நாகுக ளுமிழ்வன நகைபுரை தரளம். 80

௫௦. பழையர்த மனையன பழநறை நுகரும்
உழவர்த மனையன வுழுதொழி லுரிய
மழவர்த மனையன மணவொலி யிசையின்
கிழவர்த மனையன கிளைபயில் வளையாழ். 81

௫௧. கோதைகள் சொரிவன குளிரிள நறவம்
பாதைகள் சொரிவன பருமணி கனகம்
ஊதைகள் சொரிவன வுறையுறு மமிர்தங்
காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள். 82

௫௨. இடங்கொள் சாயல்கண் டிளைஞர் சிந்தைபோற்
றடங்கொள் சோலைவாய் மலர்கொய் தாழ்குழல்
வடங்கொள் பூண்முலை மடந்தை மாரொடுந்
தொடர்ந்து போவன தோகை மஞ்ஞையே. 83

௫௩. வண்மை யிலலையோர் வறுமை யின்மையாற்
றிண்மை யில்லைநேர் செறுந ரின்மையால்
உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்
ஒண்மை யில்லைபல் கேள்வி யோங்கலால். 84

[௪௯] 2 நகுவன· நலிவன. 6 - 7 கிளவிகள் பயிலிய. 6 - 8 கிளவிகள் பயில்வன நடமே: 7 ளவர்யி. 8 னடமென: னடைமென்: லியமென்: னடனே. 10 நகுவன: நலிவன. 11 கிளரொளி: கிளரின. 12 முதுகூல்: 14 ணகுவன. 15 நகைநகு: நகைபுரி. [௫௦] 1 பழையவர். 2, 6, 10, 14 மனையென. 3 பனிநறை: பகர்நறை. 4 பயிலும். 7 - 8 வுழு தொழில் புரியு: வுழுதொழில் புரையு. 11 வனவொலி. [௫௧] 3 குளிரி யல். 11 வுறைவுறு: வுறையறு. 12 மிரதங: வமுதங். 15 செவியுறு. 16 கவிகள். [௫௨] 5 றடங்கள். 7 மலர்பெய். 8 தார்குழல் 14 செல்வன. 16 மஞ்ஞைகள். [௫௩] ௫௯-ன் பின். 2 யில்லதோர்: யின்மையோர். 3 - 4 வறிஞ ரின்மையாற். 4 யில்லையாற். 6 யின்மையோர்: யில்லையோர். 8 ரில்லையால் 13-16 வெண்மை யில்லைப்பல் கேள்வி மேவலால். 14 யின்மைபல்.

௫௪. மூக்கிற் றூக்குறு மூரி நந்துநேர்
தாக்கிற் றூக்குறும் பறையுந் தண்ணுமை
வீக்கிற் றூக்குறும் விளியு மள்ளர்தம்
வாக்கிற் றூக்குறு மொலியின் மாயுமே. 85

௫௫. எள்ளு மேனலு மிறுங்குஞ் சாமையுங்
கொள்ளுங் கொள்ளையிற் கொணரும் பண்டியும்
அள்ள லோங்களத் தமுதின் பண்டியுந்
தள்ளு நீர்மையிற் றலைம யங்குமே. 86

௫௬. கூறு பாடலுங் குழலின் பாடலும்
வேறு வேறுநின் றிசைக்கும் வீதிவாய்
ஆறு மாறும்வந் தெதிர்ந்த வாமெனச்
சாறும் வேள்வியுந் தலைம யங்குமே. 87

௫௭. உயருஞ் சார்விலா வுயிர்கள் செய்வினைப்
பெயரும் பல்கதிப் பிறக்கு மாறுபோல்
அயிருந் தேனுமின் பாகு மாயரூர்த்
தயிரும் வேரியுந் தலைம யங்குமே. 88

௫௮. தாலி யைம்படை தழுவு மார்பிடை
மாலை வாயமிர் தொழுகு மக்களைப்
பாலி னூட்டுவார் செங்கை பங்கயம்
வானி லாவுறக் குவிவ மானுமே. 89

௫௯. பொற்பி னின்றன பொலிவு பொய்யிலா
நிற்பி னின்றன நீதி மாதரார்
அற்பி னின்றன வறங்க ளன்னவர்
கற்பி னின்றன கால மாரியே. 90

[௫௪-௫௭] வைப்புமுறை: ௫௫, ௫௭, ௫௬, ௫௪: ௫௫, ௫௪, ௫௬, ௫௭. [௫௪] ௫௫-ன் பின். 2 றூக்குற. 3-4 முரிந்த கோதைநேர். 4 தோதை நேர். 5-6 தாக்கித் தாக்குறும. 7 தழங்கு(ங்): பறையின். 9 - 10 வீக்கித் தாக்குறும். 12 மள்ளர்கை. 15 மொலியு. 16 மாலுமே: மானுமே: மாணுமே. [௫௫*] ௫௩-ன் பின். 6 கொள்பவர். 10 லாங்களத்: லங்களத்: லொண்களத். 11 தருத்தும்: தமிர்தின். 13 தள்ள. 14 நீர்வயிற். 15-16 றரைம யங்குமே. [௫௬ *] ௫௭-ன் பின். 1 கூறும். 8 வேதிவாய். 11 தெதிர்த்த: தொத்த: தடுத்த. 12 தாமெனச். [௫௭ *] ௬௦-ன் பின். 2 சோர்விலா. 3 வுயிரின். 6 செல்கதிப். 9 அயருங். 10 தேனுமென்: 10-11 தேனுநன் பாலு. 12 மாயிடைத். 10-12 தேருமின் னமுது மாயர்தங். [௫௮] 3 தவழு. 5 ஆலை. 7 தூறு. 8 மாக்களைப். 11 செங்கைப். 13 வாணி. 15 குவிதல். [௫௯] 1-2 பொற்பு நின்றன. 4 பொய்யிலார். 7 நீத. 14 னின்றவண்.

௯௦. சோலை மாநிலந் துருவி யாவரே
வேலை கண்டுதா மீள வல்லவர்
சாலும் வார்புனற் சரயு வும்பல
காலி ளேடியுங் கண்ட தில்லையே. 91

௯௧. வீடு சேரநீர் வேலை கான்மடுத்
தூடு பேரினு முலைவி லாநலங்
கூடு கோசல மென்னுங் கோதிலா
நாடு கூறினு நகரங் கூறுவாம். 92

நாட்டுப்படலம் முற்றும்

---

௩. நகரப்படலம்

க. செவ்விய மதுரஞ் சேர்ந்தநற் பொருளிற்
சீரிய கூரிய தீஞ்சொல்
வவ்விய கவிஞ ரனைவரும் வடநூன்
முனிவரும் புகழ்ந்தது வரம்பில்
எவ்வுல கத்தோர் யாவருந் தவஞ்செய்
தேறுவா ளுதரிக் கின்ற
அவ்வுல கத்தோ ரிழிவதற் கருத்தி
புரிகின்ற தயோத்திமா நகரம். 93

உ. நிலமகண் முகமோ திலகமோ கண்ணோ
நிறைநெடு மங்கல நாணோ
இலகுபூண் முலைமே லாரமோ வுயிரி
னிருக்கையோ திருமகட் கினிய
மலர்கொலோ மாயோன் மார்பினன் மணிகள்
வைத்தபொற் பெட்டியோ மலரோன்
உலகின்மே லுலகோ வூழியி னிறுதி
யுறையுளோ யாதென வுரைப்பாம். 94

[௯௦] 3 துன்னும்: துன்னி. 6 கண்டுதான். 8 வல்லரே: வல்லரோ. [௯௧] நகரப்படலத்தின் முதற் செய்யுள். 2 சேருநீர். 4 தான்மடுத். 12 கோதிலார். 14 கூறிநாம்: கூறிப்பின்: கூறினோ. [க] 1 திவ்விய. 3 சேர்ந்தன. 6 கூறிய. 7 தீஞுசொல்: வின்சொல். 13 புகழ்ந்தன. 14 வரம்பின். 27 வயோத்திமா. [உ] 3 திலதமோ. 7 (ந்)தாளோ. 16 செடியோன். 17-18 மார்பின்மன் மணிகள்: மார்பினன் மாலை: மார்பத்து மாலை: மார்பத்தின் மாலை: மார்பத்து மழுத்தி: மார்பத்து மணித்தார். 21 வானோர்.

௩. உமைக்கொரு பாகத் தொருவனு மிருவர்க்

கொருதனிக் கொழுநனு மலர்மேற்

கமைப்பெருஞ் செல்வக் கடவுளு மூவமை

கண்டிலா நகரிது காண்பான்

அமைப்பருங் காதன் முன்பிடித் துந்த

வந்தரஞ் சந்திரா தித்தர்

இமைப்பிலர் திரிவா ரிதுவலா லிதனுக்

கியம்பலா மேதுமற் றியாதே. 95

௪. அயின்முகக் குலிசத் தமரர்கோ னகரு

மளகையு மென்றிவை யயனூர்

பயில்வுற லுற்ற படிபெரும் பான்மை

பகர்திரு நகரது படைப்பான்

மயன்முதற் றெய்வத் தச்சருந் தத்த

மனத்தொழி ஞணினர் மறந்தார்

புயறெருடு குடுமி நெடுநிலை மாடத்

திந்நகர் புகலுமா றெவனே. 96

௫. புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்க

மென்னுமீ தருமறைப் பொருளேல்

மண்ணிடை யாவ ரிராகவ னன்றி

மாதவ மறத்தொடும் வளர்த்தார்

, [௩] 8 கமைப்பருஞ். 10 - 11 கடவுளர் பிறருங்: கடவுளு முதலோர்: கடவுளே முதலோர். 11 மூலகங்: மூலகர். 12 - 13 கண்டில ரங்கது. 13 நகரது. 15 அமைப்பெருங். 16-17 காத லிதுபிடித்: காத லதுபிடித். 19 வந்திரஞ். 23 திரிவ. 24 ரீதலா. 25 லதனுக்: ததனுக். 27 மூவமைமற்: மூவமைவே: மேதுவே. 28 றியாதோ. [௪] 4 நகரு. 6 - 7 மெண்ணிய வயனூற். 7 - 9 யயனூற் பயிலுற வுற்ற. 8 பயனுற. 10 - 11 படிபெரும் பாலும்: பொருட்பெரும் பாலும். 10-13 படிபெரும் பகலும் பலபெருந் திருநகர் : படி(ப்)பெரும் பாலு மிப்பெருந் திருநகர். 11 பகலும். 12-13 பெருந்திரு நகரது: யப்பெருந் திருநகர். 13 நகரிது. 14 படைப்பார். 20 ஞணிறல்: ஞணினர். 22 புயறெருடுங். 24 நெடுநில: நீணிலை. 26 திருநகர். [௫] 4 சுவர்க்க. 5 மெண்ணுமீ. 7 பொருளே. 8 மண்மிசை. 9 - 10 யாரே யிராகவ. 14 வளர்த்தோர்.

எண்ணருங் குணத்தி னவனினி திருந்திங்
　　கேழுல காளிட மென்றால்
ஒண்ணுமே யிதனின் வேறொரு போக
　　முறையிட முண்டென வுரைத்தல். 97

சு. தங்குபே ரருளுந் தருமமும் துணையாத்
　　தம்பகைப் புலன்களைத் தவிர்க்கும்
பொங்குமா தவமு ஞானமும் புரிந்தோர்
　　யாவர்க்கும் புகலிட மான
செங்கண்மால் பிறந்தாண் டளப்பருங் காலந்
　　திருவின்வீற் றிருந்தன னென்றால்
அங்கண்மா ஞாலத் திந்நக ரொக்கு
　　நன்னக ரமரர்நாட் டியாதோ. 98

எ. அரசெலா மவண வணியெலா மவண
　　வரும்பெறன் மணியெலா மவண
புரசைமால் களிறும் புரவியுந் தேரும்
　　பூதலத் தியாவையு மவண
விரசுவார் முனிவர் விண்ணவர் நாகர்
　　விஞ்சையர் முதலினோ ரெவரும்
உரைசெய்வா ராஞ ரானபோ திதனுக்
　　குவமைதா னறிதர வுளதோ. 99

[ஓ] 16 - 17 குணத்த னிவனினி. 17 னிவனினி. 18 திருந்தவ். 18 - 19 திருந்திவ் வேழுல. 20 காள்விட. 22 ஒண்ணுமோ. 23 அதனின். 25 - 26 போகத் துறைவிட. 26 முறைவிட: வுறைவிட. [சு] 1-2 தங்குமா பொருளுங்: தங்கிய பொருளுந். 5 தகும்பகைப். 6 - 7 புலன்களைந் தவர்க்கும்: புலன்கடிந் தவர்க்கும்: புலன்களைந் தவிக்கும். 7 தவிர்த்துப். 11 புணர்ந்தோர்: உணர்ந்தோர். 16 இருந்தாண். 20 - 21 றிருந்தமை தெளிந்தால்: றிருந்தமை தெரிந்தால்: றிருந்தமை தெரியில். 23-24 ஞால னன்னக, 24 தந்நக. 26 (ம்)பொன்னக. [எ] 1 அரைசெலா. 8 புரைசைமா: புரைசெய்மா: புரைசெய்மால். 9-10 கரியும் புரவியந். 15 விரகவர்: விரைசுவார்: விரைசெயா. 18 இயக்கர். 20 முதலின. 21 ரல்லால்: ரெனவும். 21-24 ரென்றால் உரைசெய்வேன் யானே யானபோ: ரேல்வாம் உரைசெய்வே னனே யானபோ. 22-24 உரைசெய்வாராஞ ரானபோ. 22-28 உரைசெய்வா ரதனால துவலா லதனுக் குவமைதா னறைதர வுளதோ. 25 ததனுக். 26-28 குவமைவே றியாதென வுளதோ: குவமைதா முண்டென வுரைத்தல். 27 னரிதரோ: னுளதரோ. 27-28 னுளதென்ற லரிதே: னுளதெனற் கரிதே: 28 வுளதே: வுளவே.

அ. நால்வகைச் சதுரம் விதிமுறை நாட்டி
நனிதவ வுயர்ந்தன பனிதோய்
மால்வரைக் குலத்தின் யாவையு மில்லை
யாதலா னுவமைமற் றில்லை
நூல்வரைத் தொடர்ந்து பயத்தொடும் பழகி
நுணங்கிய நுவலரு முணர்வே
போல்வரைத் தல்லா னுயர்வினை யோர்ந்த
தென்னலாம் பொன்மதி னிலையே. 100

௯. பஞ்சின்வான் மதியை யூட்டிய வனைய
படருகிர்ப் பங்கயச் செங்கால்
வஞ்சிபோன் மருங்குற் குரும்பைபோற் கொங்கை
வாங்குவே யமைத்தமென் பணைத்தோள்
அஞ்சொலார் பயினு மயோத்திமா நகரி
னழகுடைத் தோவென வறிவான்
இஞ்சிவா னோங்கி யிமையவ ருலகங்
காணிய வெழுந்ததொத் துளதே. 101

௧௦. கோலிடை யுலக மளத்தலிற் பகைஞர்
முடித்தலை கோடலின் மனுவின்
நூலிடை நடக்குஞ் செவ்வியின் யார்க்கு
